

Signature valid
Signed by: Assistant Director
Location:Dharmapuri
Date:2026.01.09 16:57:15

Signature valid
Signed by: Village Panchayat President
Location:Dharmapuri
Date:2026.01.16 12:49:59

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்.
தருமபுரி மாவட்டம்

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றியம், நல்லம்பள்ளி ஊராட்சி மற்றும் கிராமம் ச.எண்: **702/1A3A**-ல் அமையும் குடியிருப்பு மனைஉட்பிரிவிற்கான பூங்காபரப்பு அரசு வழிகாட்டி மதிப்புதொகை செலுத்துதல் வரைபடம். (திட்டமில்லா பகுதி)

அளவு : 1செமீ = 400மீ

கோப்பு எண் : DXQAJ83L

வ

குறிப்பு :

மனைப்பிரிவின் மொத்த பரப்பு - 0.22.09 ஹெக்டர் - 0.545ஏக்கர்

ஒதுக்கிய மனைகள் - 8

மனைப்பிரிவின் எல்லை -

நிலையிலுள்ள சாலை -

பொது ஒதுக்கிடு

மனைஉட்பிரிவின் பரப்பு - 2209.00 ச.மீ

10% பொது ஒதுக்கீடு (பூங்கா) - 220.90 ச.மீ

10% பொது ஒதுக்கீடு - 220.90 ச.மீ பரப்பளவு இடத்திற்குரிய தொகையை அரசுவழிகாட்டு மதிப்பீட்டின்படி மனுதாரால் செலுத்தப்பட்டுது.

நிபந்தனைகள்

1. அரசாணை எண்:18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்: 04.02.2019, அரசாணை எண்:16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:31.01.2020 -அரசாணை எண்.181,வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 09.12.2020-ன் படி சாலைகள் (மூலைமுடக்குகள் உட்பட மற்றும் **0.5%** பரப்பு **A) LOCALBODY**-க்கும்,**0.5%** பரப்பு உள்ளாட்சி அல்லது **B) TANGEDCO**-க்கும் தனமாக பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. அரசாணை எண்:181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்: 09.12.2020-ன் தெரிவித்துள்ளாறு உத்தேச குடியிருப்பு மனைஉட்பிரிவிற்குய தேவையான தார் சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதி மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் அமைக்கப்பட்ட பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

3. அரசாணை எண்:141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்: 16.07.2022-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. இம் மனைஉட்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும் எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்படவில்லை என்றும்,சம்மந்தப்பட்ட உள்ளாட்சியால் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியனவையல்ல என்றும் அறியப்பட்டலோ அல்லது மனைஉட்பிரிவுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைஉப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.

6. விற்பனைக்குண்டான உட்பிவுமனைகள் விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகலினை உட்பிவுமனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைஉட்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைஉட்பிரிவு நுழை வாயிலில் **60**மீ.**x 120**மீ. அளவிலான நிரந்தர தகவல் பலகை முலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்.

8. நகர் ஊரளைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதின் மூலம் விண்ணப்பதாரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிப்பார்க்கப்படுகிறது, அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று பார்க்கப்படுகிறது, சொத்தினை வாங்க விரும்பும் எந்த ஒரு நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முழுவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

9. உத்தேச மனைஉட்பிரிவு சாலைகளுக்கு மனுதாரால் தார் சாலை அமைக்கப்பட்டு **(BDO/UE)** வட்டார வளர்ச்சி அலுவலர் / யூனியன் பொறியாளர் அவர்களிடம் தரம் குறித்து தகுதிச்சான்று பெறப்பட்ட பின்னர் உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கப்ட வேண்டும்.

10. பிரஸ்தாப மனைஉட்பிரிவிற்கு இவ்வலுவலகத்தால் தொழிநுட்ப ஒப்புதல் மட்டுமே வழங்கப்படுகிறது. மனுதாரின் நில உரிமத்தினை உறுதி செய்த பின்னரே உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.

11. பிரஸ்தாப மனைஉட்பிரிவு அமையும் இடம் குறித்து நீதிமன்ற வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளது என அறியப்படின் இவ்வுத்தரவு செல்லதக்கதல்ல.

12. மனைஉட்பிரிவினை சுற்றி மனுதாரால் சுற்றுசுவர் **(COMPOUND WALL)** அமைக்கப்பட்டிருப்பின் அதனை அகற்றி அருகிலிருக்கும் இடத்திற்கு இணைப்புபாதை அமையும் வகையில் சுற்றுசுவர் இடித்து அப்புறப்படுத்தப்பட வேண்டும்.

13. மனைஉட்பிரிவின் ஊடே குறைந்த அழுத்த மற்றும் உயர் அழுத்த மின்கம்பிபாதை ஏதேனும் செல்லுமாயின் அதனை சாலையின் போக்கிற்க்கு ஏற்றவாறு மனுதாரர் தனது சொந்த செலவில் மாற்றி அமைக்கப்பட்ட பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.

14. மனைஉட்பிரிவின் ஊடே நீர் நிலை ஏதேனும் அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் மனைஉட்பிரிவு அமைக்கப்பட வேண்டும். இதனை உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.

15. மனைஉட்பிரிவு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் பெற்ற பின்பு அரசாணை எண்.112 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 22.06.2017-ன் படி **RERA** அனுமதி பெற்று பத்திரபதிவும் செய்யப்பட்ட வேண்டும்.

SWP/DTCP/DHARMAPURI/LAYOUT APPROVAL NO: 02/2026

உதவி இயக்குநர்,(மு.கூ.பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
தருமபுரி மாவட்டம்.